பெருந்தலைவர் காமராசர்
வேளாண் அறிவியல் நிலையம்
குரும்பாப்பட்டு, புதுச்சேரி-9.

# மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன் வளர்ப்பு முறைகள்

மீன் உணவு எளிதில் செறிக்கக் கூடிய மலிவான விலையில் கிடைக்கும் ஒரு புரதச் சத்து மிகுந்த உனவாகும். இயற்கை நீர் நிலைகளிலும் கடலிலும் கிடைக்கக் கூடிய மீன் வளத்தை தொடர்ந்து நாம் நம் தேவைக்கு பிடித்து உணவாக பயன் படுத்துவதால் அதன் அளவு நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. இதனை நிவர்த்தி செய்ய இயற்கையாக அமைந்த மற்றும் செயற்கையாக அமைக்கப்பட்ட குளங்களில் அறிவியல் தொழில் நுட்பத்துடன் மீன் வளர்ப்பு செய்து மீன் உற்பத்தி பெருக்க வேண்டி உள்ளது. பஞ்சாயத்து மற்றும் கிராமங்களில் உள்ள குளங்களில் மீன் வளர்ப்பு மேற் கொள்வதன் மூலம் பொருளாதார வாழ்வு மேம்படுவதோடு திறமையுள்ள கிராமத்து இளைஞர்களுக்கு நல்லதொரு வேலை வாய்ப்பினை நல்கிறது. .

உலக அளவில் சீனாவிற்கு அடுத்த படியாக இந்தியாவில் நன்னீர் மீன் உற்பத்தி இரண்டாவது இடத்தில் இருந்தாலும், பெரும்பாலும் பெருங்கெண்டை மற்றும் கெளுத்தி மீன் வளர்ப்பில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. 21 ஆம் நூற்றாண்டின் நன்னீர்ப்ராய்லர் கோழி என திலேப்பியா அழைக்கப்படுகிறது. உலக அளவில் சுமார் 40 லட்சம் டன் என்ற அளவில் திலேப்பியா உற்பத்தி செய்யப்படுகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டில் திலேப்பியா தேவை அதிகரித்து வருவதாலும், எளிதான வளர்ப்பு முறைகளும் கொண்டுள்ளதால் திலேப்பியா மீன் வளர்ப்பு தற்போது மீன் வளர்ப்போர் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்படுத்தியுள்ளது.

**சிறப்பம்சங்கள் :**

1. எல்லாவித உணவுகளையும் ஏற்று வேகமாக வளரக்கூடியது.
2. குறுகிய கால நீர்தேக்கமுடைய நீர்நிலைகள் வளர்க்க ஏற்றது.
3. நோய் எதிர்ப்பு சக்தி உடையது.
4. அதிக எண்ணிக்கையில் இருப்பு செய்து வருடத்திற்கு 3 முறை அறுவடை செய்யலாம்.

Scanned by CamScanner

## வளர்ப்பு முறைகள் :

### குளம் தேர்வு செய்தல் :

வற்றாத நீர் நிலைகளான பஞ்சாயத்து மற்றும் கோவில் குளங்களில் இம்மீன்களை வளர்க்கலாம். குளத்தின் ஆழம் 1.5ல் இருந்து 2.0 மீட்டர் வரை இருக்கலாம். கோடைக்காலத்தில் 1மீட்டருக்கு குறையாமல் இருக்க வேண்டும். குறுகிய காலமாக சுமார் 3 மாதம் நீர் தேங்கக்கூடிய குளங்களிலும் இம் மீன் வளர்க்கலாம்.

நீரைத் தேக்கி வைக்க கூடிய களிமண் மற்றும் மணல் கலந்த, வெள்ள நீரில் பாதிகப்படாத குளங்களை தேர்ந்தெடுக்க வேண்டும். பழைய குளங்களாய் இருப்பின் தூர்வாரி, ஆழப்படுத்தப் பட வேண்டும். தேவையற்ற செடி கொடிகளை அகற்ற வேண்டும் கரைகளை சீரமைத்து நீர் ஏற்றும் மற்றும் வடிகால் குழாய்களை அமைக்க வேண்டும்.

### குளம் பராமரிப்பு :

மீன் இருப்பு செய்வதற்கு முன்பு மற்றும் பின்பு எனஇருவகைகளில் குளப்பராமரிப்பு அமைந்துள்ளது.

### மீன் குஞ்சு இருப்பு செய்வதற்கு முன் மேற்கொள்ள வேண்டியது :

குளத்தில் உள்ள தேவையற்ற செடி கொடிகள், நீர்தாவரங்களை நேரடியாக ஆட்களை கொண்டோ இயந்திரங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தியோ நீக்க வேண்டும்.

இலுப்பை பிண்ணாக்கு ஹெக்டேருக்கு 2000 கிலோ இடுவதன் மூலம் தேவையற்ற களை மீன்களான குள்ளக் கெண்டை, விரால், பனையேறிக் கெண்டை போன்ற வளர்ப்புக்கு ஒத்தவராத மீன்களை அகற்றலாம்.

### சுண்ணாம்பிடுதல் :

குளத்தின் கார, அமிலததன்மை வளர்ப்புக்கு சாதகமான 7.5ல் 8.5 வரையில் கொண்டு வர சுண்ணாம்பிட வேண்டும். மேலும் குளத்தில் நோய் உண்டாக்கும் கிருமிகள் மற்றும் பல பொருட்கள் சேர்ந்து மக்கும் போது நீர் கெட்டு போகாமல் பாதுகாக்கிறது. சுமார் 200 (அ) 250 கிலோ சுண்ணாம்பு ஒரு ஹெக்டருக்கு தேவைப்படுகிறது.

### உரமிடுதல் :

மீன்களுக்குத் தேவையான இயற்கையான உணவுகளான தாவர மற்றும் விலங்கின நுன்னுயிர் உற்பத்திக்கு உரமிடுதல் அவசியமான ஒன்றாகும். அங்கக மற்றும் இரசாயன உரங்கள் மண்ணின் தன்மைகேற்பவும், மீன்களின் வளர்ச்சி மற்றும் குளத்தின் நீரின்

Scanned by CamScanner

தன்மைக் கேற்பவும் அளவிட்டு இட வேண்டும்.

**அங்கக உரம் :**

சுண்ணாம்பிட்ட 3 நாட்களுக்கு பிறகு ஹெக்டருக்கு 5000 கிலோ வீதம் ஈரமான மாட்டுச்சானம் இடவேண்டும்.

**இரசாயன உரம் :**

மாட்டுச்சான உரமிட்ட 15 நாட்களுக்கு பிறகு மண்ணின் தன்மைக் கேற்ப இரசாயண உரம் இட வேண்டும். சாதாரனமாக ஹெக்டருக்கு 100 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ சிங்கிள் சூப்பர் பாஸ்பேட் இட வேண்டும்.

**மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் :**

உரமிட்ட 15 நாட்களுக்குப் பிறகு மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய வேண்டும். ஒரு மாதம் நாற்றங்காலில் வளர்க்கப்பட்டு 2.5 செ.மீ அளவுள்ள மீன்குஞ்சுகள் சதுர மீட்டருக்கு 3 எண்ணிக்கையில் ஹெடருக்கு 25,000 இருந்து 50,000 வரை இருப்பு செய்யலாம்.

**மீன்குஞ்சுகள் இருப்பு செய்த பின் மேற்கொள்ள வேண்டியவை :**

குளத்தில் உள்ள இயற்கையான உணவுகளை மீன்கள் உண்டு வளர்ந்த போதிலும், மீன்கள் வேக வளர்ச்சியடைய தேவையான செயற்கை உணவுகளையும் இட வேண்டும். மணிலா புண்ணாக்கு 1பங்கும், தவிடு 1 பங்கும் கலந்து மீனின் எடையில் 2.5 சதவீதம் அளவிற்கு உணவாக இடவேண்டும்.

ஆரம்பத்தில் இட்ட அங்கக மற்றும் இரசாயன உரங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை உணவுகள், குறிப்பிட்ட நாட்களுக்குப் பிறகு போதுமான உரச்சத்து இல்லாதால் குறைந்துவிடும், எனவே மாதந்தோறும் மாட்டுச் சாணம் ஹெக்டருக்கு 1000 கிலோ வீதம் இட வேண்டும். அதே போல் இரசாயன உரமும் முதலில் இட்ட அளவில் பாதி அளவிற்கு மாதந்தோறும் நீரின் தன்மை கெடாதவாறு கவனத்துடன் இட வேண்டும்.

மாதந்தோறும் மீன்களை பிடித்து பார்த்து அதன் வளர்சியளவு மற்றும் நோய் தாக்கம் ஏதாவது இருக்கிறதா என்பதை சோதனைவிட வேண்டும்.

Scanned by CamScanner

**அறுவடை :**

ஆறுமாத முடிவில் 500 கிராம் அளவுக்கு வளர்ந்த மீன்கள் அறுவடை செய்யப்படும். 8ல் இருந்து 10 டன் அளவுக்கு 1 ஹெக்டரில் மீன் அறுவடை செய்யலாம். அறுவடை செய்யப்பட்ட மீன்கள் மொத்தமாக கொள்முதல் செய்யும் வியாபாரியிடம் விற்பனை செய்து அல்லது குளக்கரையில் தினந்தோறும் தேவைப்படும் அளவிற்கு மீன்களை அறுவடை செய்து சில்லரை விற்பனை செய்தும் லாபம் பெறலாம்.

**ஒரு ஹெக்டார் பரப்புள்ள குளத்தில் மீன்வளர்ப்பு மேற் கொள்வதற்கான உத்தேச வரவு செலவு விவரம் :**

| வ. எண். | விவரம் | | செலவு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | குளம் தூர்வார, ஆழப்படுத்த குளக்கரைகளை உறுதிப்படுத்தி நீர் நிரப்புவதற்கு | - | 10000 |
| 2. | சுண்ணாம்பு 200 கிலோ | - | 1000 |
| 3. | சூப்பர் பாஸ்பேட் | - | 1250 |
| 4. | யூரியா | - | 650 |
| 5. | மாட்டுச்சாணம் | - | 5000 |
| 6. | மீன்குஞ்சுகள் | - | 75000 |
| 7. | மீன் தீவனம் | - | 200000 |
| 8. | ஆட்கள், காவலாளி, மற்றும் இதர செலவுகள் | - | 10000 |
| | மொத்தம் | | 3,02,900 |

**வரவு**

| | | | |
|---|---|---|---|
| 1. | 10000 கிலோ மீன் அறுவடை செய்து கிலோ ரூ.50/- விலையில் விற்பனை செய்ததில் | - | 5,00,000 |
| 2. | நிகரலாபம் / 5,00,000 - 3,02,900 | - | 1,97,100 |


**மேலும் விவரங்களுக்கு அணுகவும் :**

முதல்வர்

**பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையம்**

குரும்பாப்பட்டு, புதுச்சேரி-605 009.

தொலைபேசி : 0413-2271292

இணைய தளம் : www.puducherrykvk.org

மின் அஞ்சல் : pondicherrykvk@yahoo.co.in


Scanned by CamScanner